ஆண்டு சந்தா ரூ. 60/-

# அன்பு பகிர்வு இயக்கம்

## செய்திமலர்

மலர் : 5    இதழ் : 4    பிப்ரவரி 2009



**தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி
உங்கள் குறைவையெல்லாங்
கிறிஸ்து இயேசுவுக்குள்
மகிமையிலே நிறைவாக்குவார்.**

பிலிப்பியர் 4:19

ஆசிரியர் சகோ. வே. தேவதாஸ்

# உங்கள் சகோதரனிடமிருந்து....



கிறிஸ்துவுக்குள் மிக அன்பானவர்களே,

சமாதானபிரபுவாம் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் யாவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள்!

தேவ கிருபையாலும் உங்கள் யாவரின் ஜெபங்களினாலும் பீல் ஆதிவாசி மக்களின் மத்தியில் ஊழியங்கள் சிறப்பாக நடைபெற்று வருகிறது. கடந்த மாதம் 3 மாநிலங்களிலும் புத்தாண்டு ஊழியர்கள் கூடுகை மற்றும் ஊழியத்திற்கான சிறப்பு திட்டக்கூடுகைகளில் கர்த்தர் மூத்த சுதேச ஊழியர்களுக்கு அதிகமாய் பாரம் தந்து பெலப்படுத்தினார்.

ஜனவரி மாத ஊழியர் கூடுகையில் ஒவ்வொரு கிராம சபைகளிலும் கிறிஸ்துமஸ் பண்டிகையை நற்செய்தி அறிவிக்கும் பண்டிகையாக ஆசரித்ததை சாட்சிகளாக ஊழியர்கள் கூறி தேவனை மகிமைப்படுத்தினார்கள். நிரம்பி வழியதக்கதாக ஆத்துமாக்களை தேவன் சபைகளுக்கு கொண்டுவந்தார், தேவனுக்கே மகிமை உண்டாவதாக! குறிப்பாக கிறிஸ்துமஸ் பண்டிகை நாட்களில் ஊழியர்களுக்கும், ஊழியர்களின் பிள்ளைகளுக்கும் உதவி செய்த உங்கள் யாவருக்கும் என் அன்பான நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் கிறிஸ்துமஸ், புத்தாண்டு வாழ்த்துக்களை கடிதம், இ–மெயில், எஸ்.எம்.எஸ், மூலமாக அனுப்பிய உங்கள் யாவரையும் கர்த்தர் தாமே ஆசீர்வதிப்பாராக!

இவ்வருடத்தில் ஜெபத்துடனும் ஆவியானவரின் நடத்துதலுடனும் திட்டங்களை பணித்தளங்களில் நிறைவேற்ற உள்ளோம். அதற்காக குறைந்தது 1000 பணித்தள திட்ட பங்காளர்கள் தேவை. அதற்கான சிறப்பு Booklet, Phamlet தயார் செய்து அனுப்புகிறோம். ஒவ்வொருவரும் இந்த வருடத்தில் குறைந்தது 2 பேரை அறிமுகம் செய்து வைக்க வேண்டுகிறேன்.

பிப்ரவரி 23ம் தேதி (23.02.1960) என்னுடைய பிறந்தநாள். 49 வருடங்கள் கர்த்தர் அடியேனை தாங்கி சுமந்து பயன்படுத்தி வருகிற அவர் அன்பிற்காகவும், கிருபைக்காகவும் தேவனைத் துதிக்கிறேன். இவ்வருடமும் தேவன் அடியேனை பயன்படுத்த, அவர் சித்தத்தை நிறைவேற்ற அந்நாளில் ஜெபிக்க வேண்டுகிறேன்.

தொடர்ந்து பீல் மக்கள் இரட்சிப்பிற்காக, நம் பாரத தேசம் தேவனால் ஆசீர்வதிக்கப்பட அனுதினமும் ஜெபியுங்கள். நாங்களும் உங்களுக்காக அனுதினமும் ஜெபித்து வருகிறோம். உங்களுக்காக நாங்கள் ஜெபிக்க எங்களுடன் இந்த தொலை பேசி எண்களில் தொடர்பு கொள்ளுங்கள். செல் : 093774–45468, 093274–45468.

**கர்த்தர் உன் களஞ்சியங்களிலும், நீ கையிடும் எல்லா வேலையிலும்**
**உனக்கு ஆசீர்வாதம் கட்டளையிடுவார்;**
**உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்திலே உன்னை ஆசீர்வதிப்பார்.**

உபாகமம் 28:8

*தேவ அறுவடைபணியில் உங்கள் அன்பு சகோதரன்*



*(வே. தேவதாஸ்)*

# நிறைவாக நிரப்புகிறதேவன்



சிறப்புச் செய்தி : **சகோதரி. D. வஹிதா தேவதாஸ்**

எல்லாவற்றையும் நிறைவாக்குகிற இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். **"தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்".** (பி–. 4:19) நம்முடைய தேவன் எல்லாவற்றையும் நிறைவாக்குகிறவர். அவர் ஐசுவரியசம்பந்தர். அவர் வானத்தையும் பூமியையும் உண்டாக்கின சர்வ வல்லமையுள்ளவர். வானத்திலும் பூமியிலும் சர்வ அதிகாரத்தையும் உடையவர். அவராலே ஐசுவரியமும், கனமும் உண்டாகிறது. அவருடைய பிள்ளைகளாகிய நாம் எப்பொழுதும் நிரம்பி வழிகிற ஆசீர்வாதங்களை எவ்விதம் பெறுவோம் என்று வேதத்தி–ருந்து ஆராய்வோம்.

**கீழ்ப்படியும் போது நிரப்புவார்**

நாம் தேவனுக்கு எல்லா காரியத்திலும் கீழ்ப்படிய வேண்டும். அவருடைய கட்டளைகளின்படி நடக்கவும், அவருடைய சத்தத்திற்கு கீழ்ப்படியவும் நம்மை ஒப்புக்கொடுக்கும் போது அவர் நம்மை நிரப்புவார். அவர் நம்மோடு கூட வசனத்தின் மூலமாகவோ, சொப்பனத்தின் மூலமாகவோ, ஊழியக்காரர் மூலமாகவோ நமக்கு உணர்த்துகிற காரியங்களுக்கு நாம் கீழ்ப்படிய வேண்டும்.

கானாவூர் க–யாண வீட்டிலே திராட்சரசம் குறைவுபட்ட போது, **இயேசுவின் தாய் வேலைக்காரரை நோக்கி : "அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதன்படி செய்யுங்கள்" என்றாள்.** இந்த வார்த்தைக்கு வேலைக்காரர்கள் கீழ்ப்படிகிறதை நாம் பார்க்கிறோம். அதே போல, **இயேசு வேலைக்காரரை நோக்கி: "ஜாடிகளிலே தண்ணீர் நிரப்புங்கள்" என்றார், உடனே இயேசுவின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து அவைகளை நிறைய நிரப்பினார்கள். பின்பு, "இப்பொழுது மொண்டு பந்தி விசாரிப்புக்காரனிடத்தில் கொண்டு போங்கள்" என்றார்.** உடனே அவர்கள் கீழ்ப்படிந்து ஒன்றும் எதிர்பேசாமல் கொண்டு போனார்கள். இதுதான் கீழ்ப்படிதல். ஒன்றையும் குறித்து மனம் பதறாமல் அப்படியே அவருடைய வார்த்தைக்கு நாம் கீழ்ப்படிய வேண்டும்.

கீழ்ப்படிந்ததினால் அன்று தண்ணீர் திருமண வீட்டில் ருசி நிறைந்த ரசமாக மாறினது. நிறைவாக்கப்பட்டது. வேலைக்காரர்கள் வெறும் தண்ணீரை நிரப்பினார்கள். ஆனால் இயேசுவின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்த போதே நிரம்பியிருந்தது திராட்சை ரசமாயிற்று.

மற்றொரு காரியத்தை உங்களுக்கு நினைப்பூட்டுகிறேன். ஊழியக்காரரின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்த போது நிறைவான ஆசீர்வாதத்தை பெற்ற சாரிபாத் விதவையை பாருங்கள். I ராஜா 17:15,16 வசனங்களை பார்க்கும் போது **"அவள் போய், எ-யாவின் சொற்படி செய்தாள்".** அங்கு நிறைவான ஆசீர்வாதத்தை பெற்றாள் என்று காண்கிறோம். 1 ராஜா. 17:12-ம் வசனத்தில் அந்த விதவையின் கூற்று என்னவென்றால் **"கொஞ்சம் எண்ணெய்" "ஒரு பிடி மாவு"** மட்டும் தான். ஆனால் எ-யாவின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்த போதோ 1 ராஜா. 17:16-ம் வசனத்தில் **"பானையின் மாவு செலவழிந்து போகவும் இல்லை, கலசத்தின் எண்ணெயி குறைந்து போகவுமில்லை"** எவ்வளவு நிறைவு பாருங்கள். நாம் தேவனால் அபிஷேிக்கப்பட்ட ஊழியர்கள், அழைக்கப்பட்ட ஊழியர்கள், கர்த்தரிடத்தி-ருந்து பெற்ற ஆலோசனைகளை கூறும் போது, நாம் அதற்கு கீழ்ப்படிந்து நடந்தோமானால் நிச்சயம் நம்முடைய குறைவுகள் நிறைவாக்கப்படும்.

**<u>கொடுக்கும் போது நிரப்புவார்</u>**

**"உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரை கனம் பண்ணு" " அப்பொழுது உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும் உன் ஆலைகளில் திராட்சரசம் புரண்டோடும்".** (நீதி: 3:9,10) அடுத்தப்படியாக **"கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும். அமுக்கி குலுக்கி சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியிலே போடுவார்கள்".** (லூக்கா 6:38) நாம் கர்த்தருக்காக எந்த ஒரு பொருளையும் முதற்பலனையும் கொடுக்கும் போது நம்முடைய களஞ்சியங்கள் பூரணமாய் நிரப்பப்படுகிறது. நாம் கொடுப்பது கொஞ்சம் தான். ஆனால் அவர் நமக்கு தரும் பங்கு பூரணமானதாய் நிரம்பத்தக்கதாய் தருகிறார். **"கொடு"** என்று சொல்லும் போது மிகவும் எளிமையாக அதாவது கொஞ்சமாக, ஒரு பிடி அளவு போன்ற அர்த்தமாகிறது. அப்படியானால் நான் கொடுக்க

வேண்டியது கொஞ்சமாக இருந்த போதிலும், அவர் நமக்கு எப்படி தருகிறாராம்? அமுக்கி குலுக்கி சரிந்து விழும்படியாய் மடி நிரப்பப்படுகிறது. என்ன ஆச்சரியம் பாருங்கள்.

**"அந்தப்படியே அவர்கள் சேர்த்து, வாற்கோதுமை அப்பங்கள் ஐந்தில் அவர்கள் சாப்பிட்டு மீதியான துணிக்கைகளினாலே பன்னிரெண்டு கூடைகளை நிரப்பினார்கள்".** (யோவான் 6:13) ஒரு சிறு பையன் அவனுடைய பெயர் கூட எழுதப்படவில்லை. அந்த சிறுவனுடைய தாயார் தன் மகனுக்கென்று ஐந்து அப்பங்களையும் 2 மீன்களையும் செய்து கொடுத்தனுப்பினார்கள். ஆனால் அந்த சிறுவன் இயேசுவின் பிரசங்கத்தினால் கவரப்பட்டு சாப்பாட்டை கூட மறந்துவிட்டான். மூன்று நாட்களான சாப்பாடு எப்படியிருந்ததோ? கெட்டுபோயிருந்ததோ? அல்லது தேவபிரசன்னத்தில் இருந்ததால் ஒருவேளை கெடாமல் இருந்ததோ? எனினும் சீஷர்கள் விசாரித்த போது அந்த சிறுவன் உடனடியாக மனப்பூர்வமாய் இயேசு கேட்டதினாலே அப்படியே கொடுத்துவிட்டான். ஒருவேளை தான் சாப்பிட நினைத்திருந்தாலும் கூட, மூன்று நாள் பசியையும் பொறுப்படுத்தாமல் இயேசுவுக்காக மனப்பூர்வமாய் கொடுத்தான். அப்படி கொடுத்ததினால் தான் அன்று இயேசு அற்புதம் செய்து ஏறக்குறைய ஐயாயிரம் புருஷர்கள் சாப்பிட்டு திருப்தியடைந்தார்கள். மட்டுமல்லாமல் நிரம்பி வழியத்தக்கதாய் பன்னிரெண்டு கூடைகளை நிரப்பினார்கள். நாம் கொடுக்கும் போது கர்த்தர் நம்மை நிரப்புவார்.

அடுத்தபடியாக லூக்கா 5: 6,7 வசனங்களில் **"அந்தபடியே அவர்கள் செய்து தங்கள் வலை கிழிந்து போகத்தக்கதாக மிகுதியான மீன்களை பிடித்தார்கள்".** பாருங்கள் இயேசு கடற்கரையிலே நின்ற இரண்டு படகுகளை கண்டார். ஒன்றில் ஏறி சீமோனிடம் கேட்டு அந்த படகில் உட்கார்ந்து ஜனங்களுக்கு போதகம் பண்ணினார். பின்பு இயேசு ஆழத்திலே வலைகளை போடுங்கள் என்ற போது சீமோன் **"ஐயரே இராமுழுவதும் நாங்கள் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை. ஆகிலும் உம்முடைய வார்த்தையின்படியே வலையைப் போடுகிறேன்"** என்று வலையை போட்ட போது அந்த வலை கிழிந்துபோகத்தக்கதாய் மீன்கள் கிடைத்தது. என்ன ஆச்சரியம்! இயேசு சீமோனிடம் படகை கேட்டபோது அது கா—யான படாகாய் இருந்தது. ஆனால் இயேசு கேட்டவுடனே எந்த மறு உத்தரவு சொல்லாமல் உடனடியாக

தன்னுடைய கா–யான படகை மனப்பூர்வமாய் கொடுத்தானே. அதனால் தான் இயேசு அவனுக்கு நிரம்பி வழியத்தக்கதாக ஆசீர்வாதத்தைக் கொடுத்தார் என்று இதில் பார்க்கிறோம். கொடுத்தது கா–யான ஒரு படகு, ஆனால் அவனுக்கு இயேசு திருப்பி கொடுத்ததோ வலை கிழியத்தக்கதாகவும், படகு அமிழத்தக்கதாகவும் மட்டுமல்லாமல் இரண்டு படகுகள் நிறைந்து அமிழத்தக்கதாகவும் நிரப்பப்பட்டது. நாம் கர்த்தருக்கு கொடுக்கும்போது அவர் நம்மை இப்படித்தான் ஆசீர்வதிப்பார். நம்முடைய கா–யான, வெறுமையான தன்மை, வெறும் வாழ்க்கையெல்லாம் நிரப்பப்படும்.

**<u>கர்த்தரை துதிக்கும் போது நிரப்புவார்</u>**

**“உன் வாயை விரிவாய்த் திற, நான் அதை நிரப்புவேன்”.** (சங் 81:10) என்றும், **“அவர் உம்முடைய வாயை நகைப்பினாலும், கெம்பீரத்தினாலும் நிரப்புவார்”.** (யோபு 8:21) என்றும், **“பரிசுத்த ஆவியின் பெலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும், சமாதானத்தினாலும் உங்களை நிரப்புவாராக”** (ரோமர் 15 : 13)

நமது வாயை விரிவாய் திறப்பது என்றால், நாம் கர்த்தரை நோக்கி துதிப்பதாகும். நாம் உள்ளத்தின் ஆழத்தி–ருந்து எப்பொழுதும் அவரை துதிக்க வேண்டும். அவர் செய்த நன்மைகளை, செயல்களை, அதிசயங்களை எண்ணி துதிக்க வேண்டும். மட்டுமல்லாமல் அவரைப் பாடி புகழ வேண்டும். ஓயாமல் அவரை ஆராதிக்க வேண்டும். கர்த்தரை எக்காலத்திலும் ஸ்தோத்தரிப்பேன், அவர் துதி எப்பொழுதும் என் வாயி–ருக்கும் என்று தாவீது கூறியது போல நாமும் எப்பொழுதும் வாயைத் திறந்து நமது தேவனை துதிக்க வேண்டும்.

சாலமோன் கர்த்தருடைய ஆலயத்திற்கான வேலைகளையெல்லாம் முடித்த போது, கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை சீயோன் என்னும் தாவீதின் நகரத்தி–ருந்து கொண்டு வந்து, இஸ்ரவேல் புத்திரரின் வம்சத்தலைவர் எல்லாரையும் எருசலேமிலே கூடிவரச் செய்தான். பின் **“அவர்களெல்லாரும் ஒருமிக்க பூரிகைகளை ஊதி,**

**ஏக சத்தமாய் கர்த்தரை துதித்து, ஸ்தோத்தரித்து பாடினார்கள். அவரை ஸ்தோத்தரிக்கையில் கர்த்தருடைய வீடாகிய தேவாலயம் மேகத்தினால் நிறையப்பட்டது. கர்த்தருடைய மகிமை தேவனுடைய ஆலயத்தை நிரப்பிற்று".** (II நாளாகமம் 5:13, 14)

பிரியமானவர்களே நம்முடைய இருதயம் தேவனுடைய ஆலயமாயிருக்கிறது. தேவனுடைய ஆவி நம்மில் வாசமாயிருக்கிறார். நாம் நமது கர்த்தரை நமக்குள்ளாகவே வைத்திருப்பது எவ்வளவு பெரிய பாக்கியம் பாருங்கள். நாம் அவருடைய ஆலயமாய் இருப்பதால், நமது இருதயமாகிய ஆலயம் எப்பொழுதும் தேவனுடைய மகிமையினாலே நிரம்பியிருக்க வேண்டும், தேவபிரசன்னத்தால் நிரம்பியிருக்க வேண்டும், எந்த சூழ்நிலையிலும், பிரச்சனைகளிலும், போராட்டங்களிலும், துன்பங்களிலும் நமது ஆலயத்தின் மகிமை குறைந்து போகாமல் நிரம்பியிருக்க வேண்டும். அப்படியானால், நாம் எப்பொழுதும் துதித்துக் கொண்டே இருக்க வேண்டும். நாம் துதிக்க, துதிக்க நமது இருதயமாகிய ஆலயம் மகிமையினால் நிரம்பியிருக்கும்.

**"என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர் என் பாத்திரம் நிரம்பி வழிகிறது".** (சங் 23:5) என்று சங்கீதக்காரன் கூறுகிறான். நமது ஆத்துமா அபிஷேகத்தால் நிரம்பி வழிய வேண்டும். நாம் பரிசுத்த ஆவியில் நிறைந்து தேவனை துதியினால் மகிமைப்படுத்தும் போது நாம் நிரப்பப்படுகிறோம். இது தான் பரிசுத்த ஆவியினால் உண்டாகும் சந்தோஷம். நமது வாயை விரிவாய்த் திறக்கும் போது அதை நிரப்புவேன் என்றவர் நாம் பரிசுத்த ஆவியில் நிறைந்து துதிக்கும் போது அவர் தாமே ரோமர் 5 : 13–ன்படி பரிசுத்த ஆவியின் பெலத்தினாலே, எல்லாவித சந்தோஷத்தினாலும், சமாதானத்தினாலும் நம்மை நிரப்புவார். இந்த உலகத்தில் எந்த ஒரு மனிதனும் தர முடியாத பெரிய சந்தோஷத்தையும், சமாதானத்தையும் நமக்கு தந்து நிரப்புகிறார்.

தேவன் தாமே தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவாராக.



# இம்மட்டும் உதவின எபிநேசர்....

## ஷாலோம் ஊழிய தரிசன விரிவாக்கத் திட்டங்கள் - 2010

தேவனுடைய கிருபையாலும், அவருடைய அநாதி தீர்மானத்தின்படியாகவும் பாரத தேசத்தில் வாழும் பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் தேவன் தந்த தரிசனத்தின்படியே 1991ம் ஆண்டு முதல் நமது பணிகள் நடைபெற்று வருகின்றன. பேய் பங்களா என்று அழைக்கப்பட்ட பழைய வீட்டில் ஆரம்பிக்கப்பட்ட ஜெப ஊழியம்; 2 குடும்பங்களாக விடுதலைக்காக ஜெபிக்க வந்தவர்களை தேவன் இயேசுவின் நாமத்தில் விடுதலை செய்தார். அதைத் தொடர்ந்து 20, 40, 60 ஆக ஜெபிக்க வந்த பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் ஆவியானவர் செயல்பட ஆரம்பித்து அற்புத அடையாளங்களுடன் இயேசு இன்னும் ஜீவிக்கிறார் என்பதை அறிந்து கொள்ளச் செய்தார். பீல் ஆதிவாசி மக்களை இயேசு நேசிக்கிறார். இவர்களை பிசாசின் பிடியி–ருந்தும், சாபத்தி–ருந்தும் விடுவிக்க தேவன் தந்த திட்டமாகிய பரமதரிசனமே நம் ஷாலோம் (Sharing Love Mission) பணியாகும். பாரத தேசத்தில் வாழும் சுமார் 1 கோடி பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் சுவிசேஷம் அறிவித்து, கிராமங்கள் தோறும் பீல் சுதேச ஊழியர்களை எழுப்பி, கிராமங்கள் தோறும் சபைகளை ஸ்தாபிப்பதும், சீஷர்களையும் ஊழியர்களையும் பயிற்சிவித்து இயேசுவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தப்படுத்துவது நம் ஊழியத்தின் நோக்கமாகும். அதுமட்டுமல்ல பீல் மக்கள் கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் மற்றும் சமூக சூழ்நிலைகள் ஆகியவற்றில் முன்னேறி தேசத்திற்கும், சபைக்கும் ஆசீர்வாதமாக விளங்க பலதரப்பட்ட திட்டங்களை செயல்படுத்துவதும் நம் ஊழியத்தின் சிறப்பு நோக்கங்களாகும்.

கடந்த 18 வருடங்களாக தேவன் இந்த தரிசனப்பணியை நிறைவேற்றி வருகிறார். ஆயிரம் விசுவாசிகளாக பெருகும் போது தேவன் 80 இலட்ச பீல் மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க பீல் சுதேச ஊழியர்களை எழுப்ப பாரம் தந்தார். ஊழியர்களை எழுப்பி பயிற்சிவிக்க கிருபையும் தந்தார். கடந்த 18 வருடங்களில் சுமார் 500க்கும் அதிகமான பீல் சுதேச ஊழியர்களை எழுப்பி பயிற்றுவிக்க தேவன் கிருபை புரிந்தார். இன்று அவர்கள் மூலமாக அநேக அற்புத அடையாளங்களுடன் 500க்கும் அதிகமான கிராமங்களில் சபைகளை ஸ்தாபிக்கவும், ஆத்துமாக்களை பல்லாயிரம் குடும்பங்களாக தேவன் தந்துள்ளார். மந்திரவாதிகள், சண்டையிடுவோர், திருடுவோர், சாராயம் காய்ச்சுவோர், பலவித பாவப்பிடியில் சிக்கியவர்கள் அனைவரும் அந்தகாரத்தி–ருந்து தேவனுடைய வெளிச்சத்தண்டையில் வந்துள்ளார்கள். **“அந்தகாரத்திலும் மரண இருளிலும் உட்கார்ந்திருக்கிறவர்களுக்கு வெளிச்சம் தரவும், நம்முடைய கால்களைச் சமாதானத்தின் வழியிலே நடத்தவும், அவ்விரக்கத்தினாலே உன்னதத்தி–ருந்து தோன்றிய அருணோதயம் நம்மைச் சந்தித்திருக்கிறது”.** (லூக்கா 1 : 78,79) வசனங்களின்படி தேவன் கிரியை செய்கிறார்.

200 கிராமங்களில் கிராம ஆலயங்கள் கட்ட தேவன் கிருபை தந்தார். சுமார் 3000 மூப்பர்கள் பயிற்சி பெற்று ஆவியின் அபிஷேகத்தைப் பெற்று வரங்களுடன் சபைகளை பராமரித்து வருகிறார்கள். ஜெபிக்கிற திருச்சபையாக, கொடுக்கிற திருச்சபையாக, ஆத்தும ஆதாயம் செய்யும் திருச்சபையாக, சாட்சியாக விளங்கி வருகின்றன. கடந்த 18 ஆண்டுகளில் எத்தனையோ எதிர்ப்புகள், விரோதங்கள், போராட்டங்கள், பிரச்சனைகள், இழப்புகள், வேதனைகள் இருப்பினும் சுவிசேஷத்திற்காகவும், இயேசுவிற்காகவும் பீல் சுதேச ஊழியர்கள், மூப்பர்கள், விசுவாசிகள் அனைவரும் எங்களுடன் தரிசனத்துடன் இணைந்து நின்று தேவன் தந்த பரமதரிசனத்தை நிறைவேற்றி வருகிறார்கள்.

மேலும் தேவன் விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக மூப்பர்கள், பெண்கள், வா–பர்கள், சிறுவர்கள் என பலதரப்பட்ட ஆவிக்குரிய பயிற்சிகளையும், முகாம்களையும் நடத்தவும் தேவன் கிருபை செய்தார். மேலும் வேதாகமங்கள் மூலமாகவும் ஒ–, ஒளி நாடகங்கள், வசனங்கள் மூலமாக பெலப்படுத்த தேவன் கிருபை புரிந்தார். மட்டுமன்றி ஆதிவாசி மாணவர்களில் சுமார் 600 பிள்ளைகளை கல்விப்பணியில் தாங்கும்படியாகவும், குஜராத்தில் ஹிரோலா, ஜெரி கிராமங்களில் Karunya Bal Vikas மூலமாக சுமார் 400 பிள்ளைகளுக்கு படிப்பறிவு கொடுக்க தேவன் கிருபை செய்துள்ளார். சுமார் 600 கிராமங்களில் முதியோர் கல்வித் திட்டத்தை நிறைவேற்ற உதவினார். ஆண்டுதோறும் மருத்துவ முகாம்கள், ஆரம்ப சுகாதார கல்வித் திட்டங்களை நிறைவேற்றவும் கிருபை செய்தார். CBN ஸ்தாபனத்தின் மூலமாக 150 கிராமங்களில் அடிகுழாய் வசதி செய்து கொடுக்க கிருபை செய்தார். இன்னும் பல பணிகளைச் செய்யவும் தேவன் கிருபை செய்தார்.

இத்தகைய பெரிய பணிகளை செய்வதற்கு பரமதரிசனம் தந்த தேவன் எங்கள் குடும்பத்தை மட்டுமல்ல Dr. பால் தினகரன் (இயேசு அழைக்கிறார்), சகோ. மோகன் சி. லாசரஸ் (இயேசு விடுவிக்கிறார்), தந்தை பெர்க்மான்ஸ் (ஜெபத்தோட்டம்) Pr.L. ஜோசப் (இயேசு நம்மோடு, ஓசூர்) Rev. D. மோகன் (Senior Pastor N.L.A.G. Church, Chennai), Pr. ஜோயல் (கோவை) போன்ற சுவிசேஷகர்களையும், ஊழியர்களையும், போதகர்களையும், ஊழிய ஸ்தாபனங்களையும் ஜெபித்து, தாங்க இணைத்துள்ளார். எத்தனையோ தொழில் செய்யும் தேவ பிள்ளைகள், மருத்துவர்கள், பணிபுரியும் தேவபிள்ளைகள், ஏழ்மையிலும் தியாகத்துடன் உதவும் கர்த்தருடைய பிள்ளைகளை ஜெபித்துத் தாங்க தேவன் எழுப்பியுள்ளார். ஒன்றுமில்லாமல் வெறுமையாய் ஆரம்பித்த ஊழியத்தை தேவன் இன்று கனப்படுத்தி உயர்த்தி அனைத்து நன்மைகள் மட்டுமல்ல, வாகனங்கள், கட்டிடங்கள், ஊழியத்திற்கு நல்ல சாதனங்களும் தந்து உயர்த்தியுள்ளார் என்பதை நினைக்கும் போது, **"கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் என்னை இதுவரைக்கும் கொண்டுவந்ததற்கு, நான் எம்மாத்திரம்? என் வீடும் எம்மாத்திரம்?"** (2சாமு. 7:18) என்று எங்களை அவர் பாதத்தில் தாழ்த்தி சமர்ப்பிக்கிறோம். இம்மட்டும் உதவின எபினேசர் எப்போதும் நம்மோடிருக்கும் இம்மானுவேலரான திரியேக தேவனுக்கு துதி கனம் மகிமை செலுத்துகிறோம். 2010ம் வருடத்திற்குள் (20 வருட ஊழிய காலத்திற்குள்) தேவனுக்காக பெரிய காரியங்களைச் செய்ய நாங்கள் குடும்பமாய் தேவன் தந்த ஊழியர்களுடன் அர்ப்பணித்துள்ளோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

## 2010 தரிசனங்களும் திட்டப்பணிகளும், தேவைகளும்

தேவன் நமக்குத் தந்த தரிசனப் பணியில் அதாவது சுமார் 1 கோடி பீல் மக்கள் மத்தியில் சுவிசேஷத்தை அறிவித்து தேவராஜ்ஜியத்தைக் கட்டும் பணியில் தேவன் உங்களை பங்காளராக இணைத்து உள்ளார். நீங்கள் பாக்கியவான்கள். பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாய் இருக்கும். தேவன்தாமே உங்களையும், உங்கள் குடும்பத்தையும், உங்கள் கையின் பிரயாசங்களையும், உங்கள் ஊழியங்களையும் வர்த்திக்கப் பண்ணுவாராக!

2009–2010 ஆண்டுகளில் தேவன் தந்த **"சின்னவன் ஆயிரமும், சிறியவன் பலத்த ஜாதியுமாவான்; கர்த்தராகிய நான் ஏற்றக்காலத்தில் இதைத் தீவிரமாய் நடப்பிப்பேன்".** (ஏசா. 60:22) வாக்குத்தத்தத்தின்படி பெருகச் செய்து ஸ்திரப்படுத்துவார் என்று கர்த்தருக்குள் ஆழமாக விசுவாசிக்கிறோம். 2010ம் ஆண்டு இறுதிக்குள் (ஷாலோம் ஊழியப்பாதையில் 20ம் ஆண்டிற்குள்) கர்த்தருக்குச் சித்தமானால், அவருடைய கிருபையால் 1000 சபைகள், 1000 சுதேச ஊழியர்கள், 10,000 மூப்பர்களுக்கு பயிற்சி கொடுத்து குறைந்தது 3 இலட்ச ஆத்துமாக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு தேவ ராஜ்ஜியத்தில் இணைக்கப்பட பாரத்துடன் நாங்கள் குடும்பமாய் சுதேச ஊழியர்கள், மற்றும் ஊழியர்களின் மனைவிமார்கள், சபைகளுடன் இணைந்து செயல்பட உள்ளோம். மட்டுமன்று 3000 ஆதிவாசி மாணவர்களுக்கு கல்வியறிவு, வழங்க உதவி செய்ய வேண்டும். ஆதிவாசி ஜனங்களுக்கு கல்வி, சுகாதார, மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்த ஆவியானவரால் ஏவப்பட்டுள்ளோம். உங்களையும் எங்களுடன் இணைந்து ஜெபித்து கரம் கொடுக்க அன்புடன் அழைக்கிறோம்.

- ❖ **1000 சுதேச ஊழியர்கள்**
- ❖ **1000 கிராம சபைகள்**
- ❖ **10000 சபை மூப்பர்களுக்கு பயிற்சி அளித்தல்**
- ❖ **500 கிராம ஆலயங்கள்**
- ❖ **3000 ஆதிவாசி சிறுவர்களை பராமரித்தல்**

2009 – 2010ம் ஆண்டுகளுக்குள் நிறைவேற்ற நம்முடைய தேவைகள் குறிப்பாக 520 சுதேச ஊழியர்களை தாங்க மாதம் ரூ. 1500/– கொடுத்து ஜெபித்து தாங்குவோர் தேவை. அதுமட்டுமல்ல மாதம் ரூ. 400/– கொடுத்து ஆதிவாசி மாணர்களைத் தாங்கக் கூடிய சுமார் 2500 ஆதரவாளர்கள் தேவை. 300 கிராமங்களில் ஆலயங்கள் கட்டப்பட ஒரு ஆலயத்திற்கு தலா குறைந்தது ரூ. 50,000/– தரக்கூடிய 300 ஆதரவாளர்கள் தேவை.

### ஷாலோம் கிராம ஊழிய ஆதரவாளர்கள் மற்றும் ஷாலோம் மிஷனெரி சிறப்புப் பங்காளர்கள்

ஊழிய பணித்தளத்தில் ஊழியர்களை தாங்குவது மட்டுமல்ல உருவாக்க கர்ப்ப வேதனையுடன் ஆத்துமாக்களை ஆதாயம் செய்து உருவாக்குவது, மிகப் பெரிய பணி அதை நிறைவேற்ற ஆலோசனைகள், திட்டங்கள், தேவைகள் ஏராளம் உண்டு.

1000 சுதேச ஊழியர்களை எழுப்பி பயிற்சி கொடுத்து உருவாக்கும் பணி மிக எளிதான பணி அல்ல. இவர்களை அந்தந்த கிராமத்தில் சரியாக கண்டெடுக்க தேவன் நமக்கு உதவிச் செய்யவும், சுதேச ஊழியர்கள் கிளை சபைகளை ஸ்தாபித்து ஸ்தல ஊழியர்களை எழுப்பித் தரும்படியாக நாம் பாரத்துடன் ஜெபிக்க வேண்டும்.

**சுதேச ஊழியர்களுக்கான 1மாத ஆரம்ப கால பயிற்சி**

சொந்த பீல் ஜனங்கள் இரட்சிக்கப்பட வேண்டும் என்று தரிசனம் பெற்று ஊழியம் செய்ய முன் வருபவர்களுக்கு மூன்று நாள் ஆரம்ப பயிற்சி முகாம் வைத்து முழு குடும்பத்திற்கும் இரட்சிப்பு, விடுதலை, அபிஷேகம் மற்றும் ஊழிய பாரத்தின் தரிசனம் தந்து அனுப்புகிறோம். அதன்பின்பு புதிதாக ஊழியத்திற்கு அர்ப்பணித்த சுதேச ஊழியர்களை தேர்வு செய்த பின் 1 மாத ஊழியர் பயிற்சி சுதேச ஊழியர்களுக்கு கொடுக்கப்படுகிறது.

**சுதேச ஊழியர்கள் வேதஅறிவு பயிற்சி**

ஊழியப் பணியில் பணிசெய்யும் சுதேச ஊழியர்கள் அனைவரையும் வேதாக கல்லூரிக்கு அனுப்ப இயலாது. அவர்களுக்காக 1 வருட (Correspondance Course) மூலமாக Shalom Bible Course ஆரம்பிக்க இருக்கிறோம். 24 பாடங்களை எளிய முறையில் மாதம் 2 நாட்கள் பயிற்சியும் அளித்து நிறைவேற்ற உள்ளோம்.

**B.Th Course பயிற்சி**

தெரிந்தெடுக்கப்பட்ட மூத்த அல்லது பெரிய சபைகளை உருவாக்கும் ஊழியர்களுக்கு Allahabad Bible College மூலமாக B.Th Course Hindi மொழியில் கொடுத்து வருகிறோம். தற்போது 80 பேர்கள் வேதத்தை கற்று தேர்ந்து சிறந்த போதகர்களாக விளங்க செய்கிறோம்.

**ஓய்வுநாள் பள்ளி மற்றும் விடுமுறை வேதாகமப் பள்ளி பயிற்சி**

சிறுவர் ஊழியங்கள் மூலமாக தேவன் நமக்குத் தந்த 500 கிராம சபைகளில் உள்ள ஆதிவாசி சிறுவர்களை கர்த்தரண்டை ஸ்திரமாக நடத்த வேண்டும்.

**வா–பர்கள் அபிஷேக முகாம்**

கடந்த ஆண்டில் சுமார் 1700 வா–பர்களை தேவன் அபிஷேகித்து சபைகளில் வல்லமையாக பயன்படுத்தி வருகிறார். இவ்வருடம் 150 வா–பர்களை அனைத்து சபைகளிலும் தெரிந்தெடுத்து குறைந்தது 30 முகாம்கள் நடத்தி வா–பர்களை உருவாக்க வேண்டும்.

**மூப்பர்கள் பயிற்சி முகாம்கள்**

தேவன் தந்த சபைகளில் குறைந்தது 7–10 மூப்பர்களாக தெரிந்தெடுத்து சுமார் 5000 மூப்பர்களுக்கு 25 முகாம்களாக பிரித்து 2 அல்லது 3 நாட்கள் அபிஷேக முகாம்கள் நடத்தப்படவேண்டும்.

**பெண்கள் எழுப்புதல் முகாம்**

அதே போலவே கிராம பெண்களை அழைத்து 25 முகாம்கள் நடத்தி சுமார் 3000 பெண்களை ஜெப வீராங்கனைகளாக உருவாக்க வேண்டும்.

**மூத்த ஊழியர்களுக்கான சிறப்பு பயிற்சி**

நம்முடைய ஊழிய எல்லைகளை அந்தந்த பகுதிகளாக பிரித்து சுமார் 50 ஏரியாக்களாக உருவாக்கியுள்ளோம். அதுபோல 15 ஒருங்கிணைப்பாளர்களுக்கு சிறப்பு பயிற்சிகளை அளித்து தங்கள் பகுதியைக் குறித்த தரிசனத்தை, பாரத்தை அளிக்க வேண்டும். மேலும் ஸ்திர சபைகள் 2010க்குள் உருவாக்கி ஸ்திரப்படுத்தப்பட்டு ஸ்தல சபைகளே சொந்த பீல் ஜனங்களை சந்திக்க பாரம் தரவேண்டும்.


மேற்கண்ட பயிற்சிகளை ஒவ்வொருவருடமும் ஒவ்வொரு மாநிலத்திலும் அளிக்க வேண்டும். பயிற்சி கொடுக்கக்கூடிய முதன்மை பயிற்சியாளர்களை உருவாக்க வேண்டும். இவைகளை நடத்துவதற்கு இடவசதி, தங்கும் வசதி, உணவு வசதி, பிரயாணச் செலவுகள் மற்றும் தேவையான உபகரணங்கள் போன்ற காரியங்களுக்கு அதிகமான நிதிஉதவி தேவை. சுதேச ஊழியர்களுக்கு மட்டும் உதவித் தொகை வழங்கிவிட்டு இவைகளை விட்டுவிட்டால்

ஊழியங்கள் வளர முடியாது. தரிசனத்தை நிறைவேற்ற இயலாது.

தற்போது தேவன் தந்த 500 கிராமங்கள் திட்டத்தை நிறைவேற்ற மாதந்தோறும் சுமார் ரூ. 2,50,000/– தேவைப்படுகிறது. மிஷனெரிகளைத் தாங்க, ஆதிவாசி மாணவர்களைத் தாங்க, வேதபுத்தகங்கள், சைக்கிள்கள் வாங்க, மேலும் ஆலயங்கள் கட்டுவதற்குக்கூட தாராளமாக காணிக்கை அனுப்புவோர் ஏராளம். ஆனால் மேற்கண்ட பயிற்சி ஊழியங்களை நடத்தி ஊழியங்களை வளர செய்யவும், மேலும் தலமை அலுவலகம், பணித்தள அலுவலக நிர்வாகத்திற்கான செலவுகளை பொறுப்பெடுக்க வரும் காணிக்கையோ மிகக் குறைவும். ஆகவே மாதந்தோறும் ரூ. 500/– கொடுத்து தாங்கக்கூடிய **500 கிராம ஊழிய ஆதரவாளர்கள்** உடனடியாக தேவை, அல்லது ரூ. 1000/– மாதந்தோறும் கொடுத்துத் தாங்கக்கூடிய **ஷாலோம் ஊழிய பங்காளர்கள்** (Shalom Mission Partners) தேவை.

இதை வாசிக்கும் எனக்கு அன்பானவர்களே, நீங்கள் துரிதமாக இத்தேவையை சந்திக்க உதவுங்கள். ஒவ்வொரு பங்காளர்களும் குறைந்தது ஒரு கிராம ஊழிய ஆதரவாளர்களை (மாதம் ரூ. 500/– கொடுத்து ஜெபித்துத் தாங்குவோர்) அல்லது ஒரு மிஷனெரி ஊழிய பங்காளரையாவது (ரூ. 1000/– கொடுத்து ஜெபித்துத் தாங்குவோர்) எழுப்பி அறிமுகப்படுத்தினால் தரிசனப் பணிளை விரைந்து செயல்படுத்த ஏதுவாக இருக்கும்.

---




## பீல் ஆதிவாசி மக்களுக்கு வேதாகமத் திட்டம் (Bible Project)

நம் ஷாலோம் மிஷனெரி இயக்கத்தின் மூலமாக தேவன் பீல் ஆதிவாசி மக்களை இரட்சித்து அனுதினமும் சபையில் சேர்த்து வருகிறார். இவர்கள் தங்களின் பாவ வாழ்க்கையை விட்டு மனம் திரும்பி தேவனுக்காக வைராக்கியமாக வாழ்ந்து வருகிறார்கள். இப்போது இந்த மக்கள் எழுதவும் படிக்கவும் செய்கிறார்கள். இந்த மக்களின் ஆவிக்குரிய வாழ்க்கையின் வளர்ச்சிக்காக குஜராத்தி, ஹிந்தி வேதாகமங்கள் வாங்கிக் கொடுக்கவேண்டியது நமது கடமையாகும். இந்த ஆண்டு குஜராத் மாநிலத்தில் உள்ள 1000 விசுவாசிகளுக்கு 1000 குஜராத்தி வேதாகமங்களும், இராஜஸ்தான் மற்றும் மத்தியப்பிரதேசம் மாநிலங்களிலுள்ள 5000 விசுவாசிகளுக்கு 5000 ஹிந்தி வேதாகமங்களும் மொத்தம் 6000 வேதாகமங்கள் (ஹிந்தி 5000, குஜராத்தி 1000) தேவைப்படுகிறது.

அகமதாபாத், இந்திய வேதாகமச் சங்கத்தி–ருந்து நமக்கு ஒரு வேதாகம் ரூ. 80/– என்ற விலைக்கு தர இசைந்துள்ளார்கள். ஆகவே இந்தத் திட்டத்திற்காக (6000 X ரூ. 80) ரூ. 4,80,000/– தேவைப்படுகிறது. இந்த நிதித் தேவை சந்திக்கப்படும்படியாக பாரத்துடன் ஜெபியுங்கள். மேலும் கர்த்தர் உங்கள் உள்ளத்தில் ஏவுவாராகில் 100 வேதாகமங்களோ, 50 வேதாகமங்களோ, 10 வேதாகமங்களோ அல்லது உங்களால் முடிந்த வேதாகமங்களையோ வாங்கிக் கொடுக்கலாம். அதற்கான தொகையை SHARING LOVE MISSION என்ற பெயரில் D.D. அல்லது Cheque மூலமாகவோ தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி இந்த தேவதிட்டத்தை நிறைவேற்றலாம். கர்த்தர்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!

## சுவிசேஷப் பணியை விரைவுப்படுத்துவோம்...



தேவன் நமக்கு ஊழியம் செய்யும்படியாக, பீல் மக்கள் வாழும் பிராந்தியங்களைத் தந்துள்ளார். நாம் அனைவரும் அறிந்தபடி பீல் மக்கள் வாழும் கிராமங்கள் சரியான போக்குவரத்து வசதி, மின் வசதி, மருத்துவ வசதி, போன்ற அடிப்படை வசதிகள் கூட சரிவர கிடைக்கப்பெறாத பகுதிகளாகும். பல கிராமங்களில் 5 கி.மீ. முதல் 10 கீ.மீ தூரம் வரை நடந்தே வந்து எப்பொழுதாவது வரும் ஜீப் போன்ற வாகனங்களைப் பிடித்து பிரயாணம் செய்கிறார்கள். அதுபோல பீல் ஆதிவாசி மக்களுடைய வீடுகள் நமது ஊர்களில் உள்ள காலனி அமைப்பைப் போல ஒரே இடத்தில் அனைத்து வீடுகளும் இருப்பதில்லை. அவரவரா் தங்கள் வயல் நிலங்களில் வீட்டைக் கட்டியிருப்பார்கள். ஆகவே ஒவ்வொரு வீட்டிற்கும் இடையே சற்று இடைவெளி இருக்கும். ஆகவே நம்முடைய சுதேச ஊழியர்கள் விசுவாசிகளைச் சந்திக்கவும், அருகிலுள்ள கிராமங்களுக்குச் சென்று சுவிசேஷம் அறிவிக்கவும் பல கீ.மீ தூரம் நடந்தே செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. நம்முடைய



சுதேச ஊழியர்களில் பலருக்கு **"சைக்கிள்"** கூட கிடையாது. குறிப்பாக கடந்த ஆண்டில் புதிதாக ஊழியத்திற்கு ஒப்புக் கொடுத்து பயிற்சி பெற்றுள்ள 65 சுதேச ஊழியர்களுக்கு மிகவும் அவசரமாக, அவசியமாக **"சைக்கிள்கள்"** தேவைப்படுகிறது. இந்த புதிய ஆண்டில் உங்கள் குடும்பத்தின் சார்பிலோ, அல்லது சபையின் சார்பிலோ ரூ. 2200/– மதிப்பில் சைக்கிள்கள் வாக்கிக் கொடுக்க முன்வரும்படி அன்புடன் உங்களை அழைக்கிறோம்.

**"சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர்மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற் போகான் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்."**

– இயேசு கிறிஸ்து

### எங்களுடன் தொடர்பு கொள்ள


| தலைமை அலுவலகம் | பணித்தள அலுவலகம் |
|---|---|
| **Sharing Love Mission**<br>168/5, Caldwell Colony, 3rd Street,<br>**Tuticorin - 628 008.** Tamil Nadu.`<br>Phone: 0461 - 2375468<br>Cell : 9345675468 | Bro. V. Devadoss<br>Founder & General Secretary<br>Shalom, Christian Kamdar Society,<br>Dahod - 389 151, Gujarat<br>Ph. : 02673 - 325468<br>Cell : 09377445468 |

email : info@shalommission.in, Website : www.shalommission.in

# ஷாலோம் பங்காளர் கவனத்திற்கு....



## தேர்வு எழுதும் மாணவர்களுக்காக விசேஷித்த ஜெபம்

பரிசுத்த ஆவியினாவரின் வழிநடத்துத–ன்படி ஷாலோம் ஊழியத்தை ஜெபித்து தாங்கும் பங்காளர்களின் பிள்ளைகளின் தேர்வுகளுக்காக பிரார்த்தனை செய்ய கடமைப்பட்டுள்ளோம். ஒவ்வொரு வருடமும் அநேகர் தொலைபேசியிலும், கடிதம் மூலமாகவும் அறிவித்து வருகிறீர்கள். ஆகவே இந்த வருடம் பெப்ரவரி 21.02.2009–ம் தேதி சனிக்கிழமை அன்று காலை 10 மணி அளவில் தூத்துக்குடி, கால்டுவெல்காலனியில் உள்ள நம்முடைய தலைமை அலுவலகத்தில் **சகோ. தேவதாஸ்** அவர்களும், அலுவலக ஊழியர்களும் மற்றும் ஜெபவீரர்கள் இணைந்து மாணவர்களுக்கு தேவன் நல்ல சுக பெலன் ஞானம் தந்து ஆசீர்வதிக்க பிரார்த்தனை செய்ய உள்ளோம். தூத்துக்குடியில் உள்ள மாணவர்கள், இல்லையென்றால் பெற்றோர்கள் நேரில் வந்து பங்குபெறலாம். வரமுடியாதவர்கள் மற்றும் வெளியூரில் இருக்கும் பங்களார் பிள்ளைகளுடைய பெயர், படிப்பு விபரங்கள் மற்றும் விசேஷித்த ஜெபக்குறிப்புகளை **கடிதம், இ–மெயில், தொலைபேசி** மூலமாக அறிவிக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். தேவன் தாமே நம் பிள்ளைகளை உன்னதமான ஆசீர்வாதங்களை தந்து உயர்த்துவாராக.

**"உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள்".** (ஏசா. 54:13)

## ஜெப வேண்டுகோள்



கடந்த டிசம்பர் மாதம் 13ம் தேதியன்று குஜராத்திலுள்ள ஜெரி கிராமத்தில் கிறிஸ்துமஸ் சிறப்பு நிகழ்ச்சிகளை முடித்துவிட்டு நாங்கள் (சகோ. தேவதாஸ், சகோதரி வஹிதா தேவதாஸ்) திரும்பி வருகின்ற வழியில் சுவிஷேசத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறவர்கள் வந்து பிரச்சனை செய்தார்கள். பின்பு கர்த்தருடைய கிருபையால் அரசாங்க அதிகாரிகள் மற்றும் போலீஸின் உதவியால் நாங்கள் மீட்கப்பட்டு இல்லத்திற்கு திரும்பினோம். ஆனாலும் அதன்பின்பு ஜெரி கிராமத்து விசுவாசிகள் தாக்கப்பட்டுள்ளார்கள். மேலும் அங்குள்ள ஊழியர் **சகோ. சாம்ஜி மேடா** – வின் மீது பொய் வழக்குகளைப் போட்டு ஜெயி–ல் அடைத்து துன்பப்படுத்தியுள்ளார்கள். மேலும் அவர்கள் கிறிஸ்தவர்களுக்கு விரோதமாக பெரிய அளவில் ஊர்வலம் நடத்தியுள்ளார்கள். இப்பொழுது கிறிஸ்தவர்களையும், சபைகளையும் அடித்து துன்பப்டுத்தி தொல்லை செய்து வருகிறார்கள். ஆகவே நீங்கள் யாவரும் தாகோத் மாவட்டத்திற்காகவும், விசேஷமாக **ஜெரி, ராசரடா, தெவல்யா** ஆகிய கிராமங்களுக்காகவும், ஊழியர்கள் மற்றும் விசுவாசிகளுடைய பாதுகாவலுக்காவும் ஜெபியுங்கள். மேலும் பணித்தள அலுவலகத்திற்காகவும், எங்களுக்காகவும் பாதுகாவலுக்காகவும் ஜெபியுங்கள். கர்த்தர் நீதி செய்யும்படியாகவும் ஜெபியுங்கள்.

# சொக்பூரா (இராஜஸ்தான்) கிராம ஆலயம்



இராஜஸ்தான் மாநிலம், பான்ஸ்வாடா மாவட்டத்தில் நகரத்தில் இருந்து மிகவும் உள்ளடங்கிய மலைப்பாங்கான பகுதிதான் சொக்பூரா கிராமாகும். இங்கு வாழும் மக்கள் இயேசுவின் அன்பை அறியாமல் வாழ்ந்து வந்தார்கள். இவர்களில் ஒருவராக வாழ்ந்தவர் தான் சகோ. பிரகாஷ் சந்திர கூவர்.

சகோ. பிரகாஷ் சந்திர கூவர் 2002–ம் வருடத்தில் இயேசுவை ஏற்றுக்கொண்டு விசுவாசத்திற்குள் வந்தார். இந்நிலையில் இவர் வயிற்றில் கட்டியினால் மிகவும் கஷ்டப்பட்டார். அதிக பணம் செலவு செய்து மருத்துவம் மற்றும் மந்திரம் செய்தும் சுகம் கிடைக்கவில்லை. இந்த நேரத்தில் காரியா என்ற கிராமத்தில் சுதேச ஊழியர் கூட்டம் நடத்துவதைப் பற்றி கேள்விப்பட்டு அங்கு சென்று ஜெபித்தபோது தேவன் வயிற்றில் இருந்த கட்டியை குணமாக்கினார். தனக்கு சுகம் தந்த தேவனுக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்ற வாஞ்சையில் 2003–ம் வருடத்தில் ஊழியர் பயிற்சி முகாமில் 1 மாதம் Training எடுத்து Seva Bharat மூலமாக நடத்துகிற வேதாகம கல்லூரியில் சேர்ந்து ஊழியத்திற்கு தன்னை அர்ப்பணித்தார், மேலும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றும் ஊழியம் செய்து வருகிறார். தற்போது சொக்பூரா கிராமத்தில் 45 குடும்பத்தார் தேவனை ஆராதிக்கின்றனர். அதில் 15 குடும்பத்தார் சொக்பூரா கிராமத்திலுள்ளவர்கள். மற்றகுடும்பத்தார் அனைவரும் அருகிலுள்ள கிராமத்திலுள்ளவர்கள்.

தேவனை ஆராதிக்க சரியான இட வசதி இல்லாத காரணத்தால், தேவனுக்கென்று ஆலயம் கட்ட தன்னுடைய நிலத்தை காணிக்கையாக கொடுத்துள்ளார். அந்த இடத்தில் தேவநாமம் மகிமைப்படும்படியாக ஒரு அழகிய கிராம ஆலயம் கட்டப்பட்டுள்ளது.

**Sponsor's Name : Mr. Johnson. (St. John Freight System) - Tuticorin.**

## மத்தியபிரதேசம், முண்டத் கிராம ஆலயத்தில் நடைபெற்ற
# கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்









முண்டத் கிராம ஆலயத்தின் சார்பில்
80 விதவைப் பெண்களுக்கு புத்தாடைகள் வழங்கப்பட்டது

## 2009 புத்தாண்டு இராஜஸ்தான் ஊழியர்களின் குடும்ப கூடுகை



கலாச்சார வரவேற்பு



புத்தாண்டு வாக்குத்தத்த செய்தி



வாக்குத்தத்த வசனங்களோடு ஊழியர்கள்



ஆவியானவரால் நிரப்பப்படும் வேளை

Caruna Bal Vikas மூலமாக குஜராத், ஹிரோலா கிராம ஆலயத்தில் நடை பெற்ற

## கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்



சிறுவர்களுக்கு வழங்கப்பட்ட கிறிஸ்துமஸ் வெகுமதிகளுடன்



உணவு வேளை





சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகள்

Caruna Bal Vikas மூலமாக குஜராத், ஜெரி கிராம ஆலயத்தில் நடைபெற்ற

## கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்



கூடியிருந்த சிறுவர்கள்



சிறுவர்களுக்கு கிறிஸ்துமஸ் வெகுமதிகள் வழங்கப்படுகிறது



கிறிஸ்துமஸ் தாத்தாக்களின் சிறப்பு நடனம்



சிறுவர்களின் சிறப்பு கலை நிகழ்ச்சிகள்

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்

| | | |
|---|---|---|
| மாணவனின் பெயர் | : | **சாம் டாமோர்** |
| தகப்பனார் பெயர் | : | சார்தார் டாமோர் |
| தாயார் பெயர் | : | ஜேமாபேன் |
| பிறந்த நாள் | : | 15.03.2000 |
| படிக்கும் வகுப்பு | : | III |
| சொந்த ஊரின் பெயர் | : | டுங்கர்பீத் |
| தாலூகா | : | குசல்கட் |
| மாவட்டம் | : | ஜாபுவா |
| மாநிலம் | : | மத்தியப்பிரதேசம் |
| தங்கி படிக்கும் விடுதி | : | Home |



**மாணவனின் பெற்றோரைப் பற்றி சில வரிகள்:—**

சாம் டாமோரின் குடும்பம் இயேசுவைப் பற்றி அறியாதிருந்த குடும்பம். இந்த சிறுவனின் தாயாருக்கு கண் தெரியாமல் இருந்தது. இவனுடைய தகப்பனார் தனது மனைவிக்கு கண் பார்வை கிடைக்க அநேக மருத்துவ சிகிச்சைகளுக்கு செலவு செய்தும் பயனில்லாமல் மிகவும் சோர்ந்து போன நிலையில், அருகிலுள்ளவர்கள் மூலமாக பக்கத்துக் கிராமத்தில் நடக்கும் ஆராதனையைப் பற்றிக் கேள்விப்பட்டு அங்கு தொடர்ந்து சென்று ஆராதனையில் பங்கு கொண்டு, தனது மனைவிக்காக தொடர்ந்து ஜெபித்துவந்தார். தேவன் இவருடைய ஜெபத்தைக் கேட்டு அவரது மனைவிக்கு நல்ல கண் பார்வையைக் கொடுத்துள்ளார். பின்பு தேவன் இவருக்கு கொடுத்த தரிசனத்தின் படியே இராஜஸ்தானிருந்து மத்தியபிரதேசம் சென்று கனாகேத் சபையின் ஊழியத்தை பொறுப்பாக செய்து வருகிறார்.

**திறமை, தாலந்து மற்றும் வாஞ்சை:-**

ஜெபிப்பதிலும், பாடல் பாடுவதிலும் அதிக உற்சாகம் உண்டு. நன்றாக படிப்பான்.


**ஜெபியுங்கள்:-**

இவன் நன்றாக படிக்க தேவன் விசேஷித்த ஞானத்தைத் தரவும், பெற்றோர் செய்கிற ஊழியங்களையும், இவனுடைய குடும்பத்தையும் கர்த்தர் ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள்.

**இச்சிறுவனைத் தாங்குபவர் : Mrs. Rathi Koilpitchai,** Nazareth.

(இந்த சிறுவனைப் போல் இன்னும் 280 பிள்ளைகளுக்கு ஆதரவாளர்கள் தேவை.)

## சுதேச ஊழியர் சாட்சி சகோ. சந்து டாமோர்



இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள் என்னுடைய பெயர் **சந்து டாமோர்.** நான் குஜராத் மாநிலம் தாகோத் மாவட்டம், ஹடுமத் கூட்டா கிராமத்தைச் சேர்ந்த ஒரு பீல் ஆதிவாசி. நான் ஒரு இந்துக் குடும்பத்தில் பிறந்து விக்கிரகங்களுக்கு பூஜை செய்து வணங்கி வந்தேன். 1985ஆம் ஆண்டு எனக்கு திருமணமானது. எனது திருமணத்திற்குப் பின் நான் பயங்கரமான நோயினால் பாதிக்கப்பட்டேன். எனது உடம்பில் ஒரு கட்டி வளர்ந்து, தாங்க முடியாத வ–யை ஏற்படுத்தியது. மேலும் நான் பிசாசின் பிடியில் கஷ்டப்பட்டேன், எனது குடும்பத்தாரையும் கஷ்டப்படுத்தி வந்தேன். எனது மாமா என்னை மந்திரவாதிகளிடம் அழைத்துச் சென்று கட்டியை குணமாக்க முயற்சி செய்தார். ஆனால் குணமாகவில்லை. மருத்துவமனையில் காண்பித்து ஐந்து ஆண்டுகள் தொடர்ந்து மருந்துகள் சாப்பிட்டும் குணமாகவில்லை. மந்திர வார்த்தைகளை உச்சரித்துக் கொண்டேயிருந்தால் சரியாகும் எனக்கூறி மந்திர வார்த்தைகளை எனது மாமா கற்றுத்தர ஏற்பாடு செய்தார், இதற்காக கோழியின் இரத்தத்தைக் கூட குடித்தேன், ஆனாலும் பயனில்லை. எனவே நான் மரித்துவிட்டால் கூட நன்றாக இருக்கும் என்ற எண்ணம் எனக்கு தோன்றியது. இந்த சூழ்நிலையில் ஜாலோத் ஊருக்கு மதராஸி–ருந்து ஒரு மந்திரவாதி வந்துள்ளார் எனவும் அவர் ஜெபம் செய்தால் குருடர் பார்வையடைகின்றனர், நோயாளிகள் சுகமாகின்றனர், பிசாசு பிடித்தவர்கள் விடுதலையாகின்றனர் எனவும் கேள்விப்பட்டு அங்கே சென்றோம். அங்கு **சகோ. தேவதாஸ்** அவர்கள் எனக்காக ஜெபித்த போது தேவ வல்லமையால் கட்டி மறைந்தது பூரண சுகம் கிடைத்தது. மேலும் பிசாசின் பிடியி–ருந்தும் விடுதலை கிடைத்தது. மேலும் எனக்கு குழந்தைகள் இல்லாம–ருந்தது. **சகோதரி வஹிதா தேவதாஸ்** அவர்கள் ஜெபித்தார்கள், தேவன் குழந்தைச் செல்வத்தைக் கொடுத்தார். தேவன் எங்களுக்குச் செய்த நன்மையினிமித்தம் அந்தகாரத்திலும், பாவத்திலும் வாழ்ந்து கொண்டிருக்கிற பீல் மக்களை இயேசுவண்டை அழைத்துவர முடிவு செய்து ஊழியத்திற்கு அர்ப்பணித்தேன். கடந்த 16 வருடமாக குடும்பமாக தேவனுடைய ஊழியத்தை செய்து வருகிறோம். எங்கள் குடும்பத்திற்காகவும், ஊழியத்திற்காகவும் ஜெபியுங்கள்.

இந்த சுதேச ஊழியரை தாங்குபவர்: **Mr. Duraisingh,** Tirupur.

# பணித்தள சாட்சிகள்

தேவனுக்கே மகிமை

**சகோ. சாந்திலால் கலாசுவா** **தாத்கேலா (குஜராத்)**

–ம்பாகேடி கிராமத்தைச் சேர்ந்த கஸ்னாபாய் என்ற சகோதரன் பிசாசின் போராட்டத்தில் அகப்பட்டு பைத்தியமாக இருந்தார். இதனால் சுய நினைவை இழந்து அங்கும் இங்குமாக அலைந்து கொண்டிருந்தார். பல ஆயிரம் ரூபாய் செலவழித்து மருத்துவம் மற்றும் மந்திரங்கள் செய்தும் பலன் கிடைக்கவில்லை. இறுதியாக நம்முடைய சபையில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனைக்கு அழைத்து வந்தார்கள். நான் இயேசுவைப் பற்றிக் கூறி பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புதமாக விடுதலைக் கொடுத்தார். இப்போது பூரண சுகம் பெற்று கூ– வேலைக்குச் செல்ல ஆரம்பித்துவிட்டார்.

**சகோ. கோர்சிங் டாமோர்** **புரக்குவா (குஜராத்)**

புரக்குவா கிராமத்தைச் சேர்ந்த ரம்சுபாய் என்ற சகோதரரின் 10 வயது மகன் சீமன்பாய் வியாதிப்பட்டிருந்தான். அநேக மருத்துவம் மற்றும் மந்திரங்கள் செய்தும் சுகம் கிடைக்கவில்லை. மருத்துவர்களால் கைவிட்ட நிலையில் தொலைபேசி மூலம் என்னிடம் தொடர்பு கொண்டு ஜெபிக்கும்படி கூறினார். உடனே நான் இயேசுவின் நாமத்தை சொல்– பாரத்தோடு ஜெபித்தேன். தேவன் ஜெபத்தைக் கேட்டு அற்புதமாக விடுதலை கொடுத்தார்.

**சகோ. வீர்சிங் பாரியா** **தார்மி (குஜராத்)**

சன்னாபாய் என்ற சகோதரன் பிசாசின் போராட்டத்தினால் 15 வருடங்களாக வியாதியினால் கட்டப்பட்டிருந்தார். இவர் குடும்பத்திலுள்ளவர்களும் அடிக்கடி வியாதியினால் பாதிக்கப்பட்டார்கள். அநேக மந்திரங்கள் செய்தும் விடுதலை கிடைக்கவில்லை. இறுதியாக இவர் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு விசுவாசத்துடன் ஆலயத்திற்கு வந்து ஜெபித்தபோது தேவன் அற்புதமாக பிசாசின் கட்டி–ருந்தும், நோயி–ருந்தும் விடுதலை கொடுத்தார்.

**சகோ. சுரும்லால் M. டாமோர்** **சங்கர்பூரா (குஜராத்)**

ஹவ்ஜிபாய் என்ற சகோதரன் தீராத தலைவ–யினால் கஷ்டப்பட்டு வந்தார். அநேக மந்திரங்கள் மற்றும் மருத்துவம் செய்தும் சுகம் கிடைக்கவில்லை. கடைசியாக நம்முடைய சபையில் நடைபெற்றக் கூட்டத்திற்கு வந்து இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு விசுவாசத்துடன் ஜெபித்தபோது தேவன் அற்புத விடுதலையைக் கொடுத்தார்.

**சகோ. வஜ்ஹிங் வாசுனியா** **மூவால் (இராஜஸ்தான்)**

ரமுடிபேன் என்ற சகோதரிக்கு கையில் விஷப்பாம்பு கடித்து விட்டது. இதனால் ஏற்பட்ட வேதனையைத் தாங்க முடியாமல் பல மருந்துகளை சாப்பிட்டுள்ளாள். இருப்பினும் வேதனை நீங்கவில்லை. இறுதியாக லீலாபேன் என்ற விசுவாச சகோதரி நம்முடைய சபைக்கு அவளை அழைத்து வந்தாள். சபையில் நாங்கள் மிகவும் பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புதமாக விஷத்தை நீக்கி ஜீவனைப் பாதுகாத்தார்.

**சகோ. பாபுலால் மச்சார்** **டாண்டிசோட்டி (இராஜஸ்தான்)**

காளுடாமோர் என்ற சகோதரனுக்கு கை விரல் சிறிது சிறிதாக அழுகி நாற ஆரம்பித்தது. மருத்துவமனைக்குச் சென்று அநேக மருந்துகள் சாப்பிட்டும் விர—ல் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. இறுதியாக இயேசுவை விசுவாசித்து ஆலயத்திற்கு வந்தார். இவருக்கு இயேசுவின் நாமத்தைச் சொல்— பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

**சகோ. பத்தியா கராசியா** **கும்புரா (இராஜஸ்தான்)**

மாடேளாபாய் ராட்டுவா என்ற சகோதரன் ஒரு வருடமாக நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார். இதனால் உடல் முழுவதும் வீக்கமாக இருந்தது. அநேக மந்திரங்கள் மற்றும் மருத்துவம் செய்தும் சுகம் கிடைக்கவில்லை. இந்த சகோதரன் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு தொடர்ந்து 3 வாரம் ஆலயத்திற்கு வந்து ஜெபித்தார். தேவன் அற்புதமாக சுகம் கொடுத்தார்.

**சகோ. சோம்ஜி பட்டேல்** **லாலாவாடா (இராஜஸ்தான்)**

ஹரிகிருஷ்ணா என்ற சகோதரனின் மனைவிக்கு வயிற்றில் நீர்க் கட்டி இருந்தது. அநேக மந்திரவாதிகளிடம் சென்று பல மந்திரங்கள் செய்தும் சுகம் கிடைக்கவில்லை. மாறாக வேதனை அதிகரிக்க ஆரம்பித்து விட்டது. கடைசியாக இயேசுவைப் பற்றிக் கேள்விப்பட்டு நம்முடைய ஆலயத்திற்கு அழைத்து வந்தார். நான் இயேசுவின் நாமத்தைச் சொல்— விசுவாசத்துடன் ஜெபித்தபோது தேவன் அற்புதமாக அந்த நீர்க் கட்டி மறையும்படி செய்தார். அந்த சகோதரி இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு தேவனை சாட்சி கூறி மகிமைப்படுத்தினாள்.

**சகோ. களியாபாபோர்** **காச்சலா (மத்தியபிரதேசம்)**

சர்மாபேன் என்ற சகோதரி கால் நடக்க முடியாத நொண்டியாக இருந்தாள். இந்த சகோதரிக்காக சபையில் நாங்கள் பாரத்தோடு ஜெபித்தோம். கர்த்தர் கேட்டு அற்புதமாக கால்களில் பெலனைக் கொடுத்து நடக்கும்படி செய்தார். தேவனுக்கே மகிமை.

**சகோ. பகதூர்சிங் பாரியா** **ஜாராதாபுர் (மத்தியபிரதேசம்)**

அனிதாபேன் என்ற சகோதரியின் கா—ல் 5 மாதத்திற்கு முன்பு விஷப்பாம்பு ஊர்ந்து சென்று விட்டது. இதனால் கால்கள் மெதுவாக வீங்க ஆரம்பித்தது. மருத்துவமனைக்குச் சென்று அதிக பணம் செலவழித்தும் சுகம் கிடைக்கவில்லை. இறுதியாக ஆலயத்திற்கு என்னிடம் ஜெபிக்க வந்தாள். நான் அந்த சகோதரிக்கு இயேசுவின் நாமத்தைக் கூறி பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

**சகோ. பிரகாஷ் D. டாமோர்** **சஜே— (மத்தியபிரதேசம்)**

ரமாபேன் என்ற சகோதரி பிசாசின் பிடியில் சிக்கி இருந்தாள். பிசாசு இந்த சகோதரியின் நாவை கட்டி வைத்திருந்ததால் வாய் பேச முடியாத ஊமையாக இருந்தாள். இந்த சகோதரியை ஆலயத்திற்கு அழைத்து வந்தார்கள். நானும் சபையின் விசுவாசிகளும் இணைந்து பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புதமாக விடுதலை கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

## *களச்செய்திகள்...*

**குஜராத்**

**துதியுங்கள்**

- ததேலா கிராமத்தில் கடந்த மாதம் புதிதாக ஒரு ஊழியரை உருவாக்க தேவன் கிருபை செய்தார்.
- ஹிரோலா கிராமத்தில் கடந்த மாதம் 2 விசுவாசிகள் வீட்டில் வீட்டுக் கூட்டம் நடத்தவும், வீடியோ மூலமாக இயேசு திரைப்படம் காண்பித்து சுவிசேஷம் அறிவிக்கவும், புதிதாக வேதாகமங்கள் வாங்கவும் தேவன் கிருபை செய்தார்.

**ஜெபியுங்கள்**

- உஸ்வானியா கிராமத்தி—ருக்கிற வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு வியாதிகள் முற்றிலும் அழிக்கப்பட ஜெபியுங்கள்.
- மத்வா கிராமத்தில் சபை விசுவாசிகள் மற்றும் மூப்பர்கள் நடத்துகிற பஜனை பிரசங்கத்தின் மூலமாக அநேகர் தேவன் பக்கம் வரும்படியாக ஜெபியுங்கள்.
- சிமளியா கிராமத்தில் 2009ம் ஆண்டில் புதிய 5 ஊழியர்கள் உருவாகவும் 5 கிராமங்களில் ஆராதனைகள் ஆரம்பிக்கப்படவும் ஜெபியுங்கள்.
- சாசியா கிராமத்தில் நடைபெறுகிற ஆலய கட்டுமானப்பணி விரைவில் முடிக்கப்படவும். கிராமத்திலுள்ள 128 குடும்பங்கள் பிசாசின் அடிமைத்தனத்தி—ருந்து விடுவிக்கப்படவும் ஜெபியுங்கள்.

**இராஜஸ்தான்**

**துதியுங்கள்**

- களியா கிராமத்தில் கடந்த மாதத்தில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் சுமார் 600 விசுவாசிகள் கலந்து கொண்டு தேவனை விடுதலையோடு ஆராதித்தார்கள். 5 குடும்பத்தார் புதிதாக இயேசுவை ஏற்றுக் கொண்டு விசுவாசத்தில் வளர்ந்து வருகிறார்கள். ஞானஸ்நானத்தின் மூலமாக கிறிஸ்துவை அறிக்கையிடும் 3 பேருக்காகவும் தேவனைத் துதியுங்கள்.
- கோய்க்கா கிராமத்தில் கடந்த மாதம் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் சுமார் 513 விசுவாசிகள் கலந்து கொண்டு தேவனை விடுதலையோடு ஆராதித்தார்கள். ஞாயிறு பள்ளியில் 160 சிறுவர்கள் கலந்து கொண்டு ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்து வருகிறார்கள்.

**ஜெபியுங்கள்**

- ☞ கோடா கிராமத்திலுள்ள மகுடிபேன் என்ற சகோதரிக்கு தேவன் குழந்தை பாக்கியத்தைக் கொடுக்கும்படியாகவும், மடியாபாய் என்ற சகோதரனின் குழந்தைக்கு காச நோயி–ருந்து விடுதலை கிடைக்கவும் ஜெபியுங்கள்.
- ☞ முனிய கூட்டா கிராமத்தில் ஆப்லாபாய் என்ற சகோதரர் இயேசுவை ஏற்றுக் கொள்ளும்படியாகவும், விசுவாசத்தி–ருந்து பின்வாங்கிப் போன சம்பாபேன் என்ற சகோதரி மீண்டும் சபைக்கு வரும்படியாகவும் ஜெபியுங்கள்.
- ☞ ரத்தன்புரா கிராம ஊழியரின் வீடு கட்டப்பட தேவைகள் சந்திக்கப்படவும் கிராமத்திலுள்ள தண்ணீர் கஷ்டம் மாறவும் ஜெபியுங்கள்.
- ☞ கதடியா கிராமத்தில் புதிதாக ஆலயம் கட்டப்பட ஜெபியுங்கள்.

**மத்தியப்பிரதேசம்**

**துதியுங்கள்**

- ❁ கடந்த மாதம் கேடி கிராமத்தில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் சுமார் 350 விசுவாசிகள் கலந்து கொண்டு தேவனை விடுதலையோடு ஆராதித்தார்கள். ஞாயிறு பள்ளியில் 156 சிறுவர்கள் கலந்து கொண்டு ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்து வருகிறார்கள்.
- ❁ அந்தர்வே–யா கிராமத்தில் கடந்த மாதம் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் சுமார் 645 விசுவாசிகள் கலந்து கொண்டு தேவனை விடுதலையோடு ஆராதித்தார்கள். 3 குடும்பத்தார் புதிதாக இயேசுவை ஏற்றுக் கொண்டு ஆலயத்திற்கு வருகிறார்கள். தேவனைத் துதியுங்கள்.

**ஜெபியுங்கள்**

- ☞ சொக்வாடா கிராமத்திலுள்ள வெசுபேன், வனிதாபேன், சவிதாபேன் ஆகியோருக்கு தேவன் குழந்தை பாக்கியத்தைத் தரும்படியாக ஜெபியுங்கள்.
- ☞ ஜம்முகேடா கிராமத்தில் புதிய இடத்தில் ஆலய கட்டுமானப்பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எந்த விதத் தடைகளும் வராமல் தேவன் பாதுகாக்கவும், பணத்தேவைகளை தேவன் சந்திக்கவும் ஜெபியுங்கள்.
- ☞ ஊழியத்திற்கு அதிகமாக எதிர்ப்பு தெரிவிக்கும் புற மதத்தைச் சேர்ந்தவர்களும், எதிர்ப்பு இயக்கங்களைச் சேர்ந்தவர்களும் மனந்திரும்ப ஜெபியுங்கள்.
- ☞ நகாரி கிராமத்தில் சாராயம், விபச்சாரம் போன்ற பாவத்திற்கு அடிமைப்பட்டிருக்கும் மக்கள் விடுவிக்கப்படவும், புதிதாக இயேசுவை ஏற்றுக்கொண்ட மக்கள் விசுவாசத்தில் நிலைத்திருக்க ஜெபியுங்கள்.

**நமது ஷாலோம் மிஷனெரிப் பணி நடைபெறும் மாநிலங்கள், மாவட்டங்கள், மக்கள் தொகை**



## இவைகளுக்காக பாரத்துடன் ஜெபியுங்கள்

### குஜராத் தாகோத் மாவட்டம்

| | தாலுகாக்கள் | கிராமங்கள் | மக்கள் தொகை |
|---|---|---|---|
| 1. | தேவ்கட் பாரியா | 86 | 188996 |
| 2. | தான்பூர் | 90 | 131974 |
| 3. | தாகோத் | 85 | 256458 |
| 4. | ஃபத்தேப்பூரா | 96 | 185419 |
| 5. | கர்பாடா | 34 | 142448 |
| 6. | –ம்கேடா | 152 | 239357 |
| 7. | ஜாலோத் | 150 | 335458 |

### மத்தியப்பிரதேசம் – ஜாபுவா மாவட்டம்

| | தாலுகாக்கள் | கிராமங்கள் | மக்கள் தொகை |
|---|---|---|---|
| 1. | அ–ராஜ்பூர் | 340 | 342324 |
| 2. | பாபரா | 50 | 78208 |
| 3. | ஜாபுவா | 249 | 227732 |
| 4. | ஜோபட் | 149 | 145325 |
| 5. | மேக்நகர் | 110 | 113825 |
| 6. | பேட்லாவத் | 212 | 157991 |
| 7. | ராணாப்பூர் | 95 | 80383 |
| 8. | தாந்லா | 112 | 127742 |
| 9. | தார் | 419 | 279638 |
| 10. | குக்ஸி | 257 | 324478 |
| 11. | பாஜ்னா | 220 | 122537 |
| 12. | ரத்லம் | 169 | 229798 |


### இராஜஸ்தான் – பான்ஸ்வாடா மாவட்டம்

| | தாலுகாக்கள் | கிராமங்கள் | மக்கள் தொகை |
|---|---|---|---|
| 1. | பான்ஸ்வாடா | 306 | 284012 |
| 2. | பாகிதாரா | 294 | 287935 |
| 3. | குசல்கட் | 394 | 273426 |
| 4. | கடி | 168 | 237521 |
| 5. | காட்டோல் | 314 | 311332 |

மேலே கொடுக்கப்பட்ட அனைத்து மாவட்டங்களிலும் ஊழியங்கள் நடைபெற்று வருகின்றன. கட்டமிட்டுக் காட்டப்பட்டுள்ள தாலுகாக்கள் மிகவும் அதிகமாக ஊழியங்கள் நடைபெறும் இடங்களாகும். இங்கே கொடுக்கப்பட்ட அனைத்து தாலுகாக்களிலும் உள்ள 4550 கிராமங்களில் ஊழியங்கள் வளர்ந்து பெருகவும், தேவன் பீல் மக்கள் மத்தியில் அநேக அற்புதங்களைச் செய்யவும் அநுதினமும் ஜெபியுங்கள்.

# பிஷப் நியுபிகின்

மிஷனெரி முன்னோடிகள்



தமிழ் நாட்டிலுள்ள ஸ்காட்லாந்து திருச்சபைக்கு மிஷனெரி பணியாளராக அனுப்பப்பட்ட நியூபிகின், 1909 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 8ஆம் நாள், நார்த்தம் பிரியாவில் உள்ள நியுகாசல் என்ற ஊரில் பிறந்தார். இவர் குயின்ஸ் கல்லூரி, கேம்பிரிட்ஜ் பல்கலைகழகத்தில் பட்டம் பெற்று, 1931ஆம் ஆண்டு கிளாஸ்கோ நகரில் உள்ள கிறிஸ்தவ மாணவர் இயக்கத்தில் சேர்ந்து பணிபுரிந்து வந்தார். 1933–36 வரை இறையியல் பயிற்சி பெற்றபின், தமிழ் நாடு வந்து மிஷனெரி பணிசெய்ய ஆரம்பித்தார். தமிழை நன்றாக கற்று பாவமும் இரட்சிப்பும் என்ற தமது முதல் புத்தகத்தை 1937 ஆம் ஆண்டு காஞ்சிபுரத்தில் வெளியிட்டார். பேராயர், நியூபிகின் அவர்கள் தென் இந்திய ஒருங்கிணைந்த திருச்சபைகள், ஆங்கி–கன் மற்றும் மெதடிஸ்ட் திருச்சபைகள் யாவும் இணைந்து, புதிதாக 1947ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட தென் இந்திய திருச்சபையின் பேராயராக அபிஷேகிக்கப்பட்டு மதுரை – ராமநாதபுரம் பேராய பணிக்காக நியமிக்கப்பட்டார். பிறகு 1965ஆம் ஆண்டு சென்னை பேராயராக நியமிக்கப்பட்டு, 1974 வரை பணி செய்தார். பின்பு பர்மிங்காமில் உள்ள செல்– ஒக் கல்லூரி பேராசிரியராக 5 ஆண்டுகள் பணி செய்தார். பின்பு பிரிட்டிஷ் சீர்திருத்த ஒருங்கிணைப்பு திருச்சபையின் ஆயராக நியமிக்கப்பட்டார்.

பேராயர் நியூபிகின் ஒரு சிறந்த எழுத்தாளரும், சர்வதேச மாநாடுகளில் சிறந்த பேச்சாளருமாய் விளங்கினார். இவர் **“கர்த்தரின் வீடு”, “திறந்த ரகசியம்”, “கிரேக்கருக்கு பைத்தியம்”, “இறைபணியும் மேலை நாடுகளின் கலாச்சாரமும்”, “பலதரப்பட்ட சமூதாயத்தில் இறைபணி முடிவுறாத நிரல்”, “இன்றைய ஊழியத்தில் திரித்துவக் கொள்கை”** போன்ற பல புத்தகங்களை எழுதியுள்ளார். 20ஆம் நூற்றாண்டின் மதிப்பிற்குரிய இறையியல் வல்லுநர் என அவரை கூறலாம். இவருடைய

படைப்புகள் ஆசிய ஐரோப்பிய நாடுகளின் கலாச்சாரத்தைக் கடந்து நிற்கிறது. இவருடைய மனைவியின் பெயர் ஹெலன். ஒரு ஆண் மகனையும், மூன்று பெண் மக்களையும் தேவன் கொடுத்தார். இவர் எதிர்கால திருச்சபைக்குக் கொடுத்த முக்கிய செய்திகளில், மனிதன் இக்கட்டான அனைத்து சூழ்நிலைக்கும் சிலுவையே பதில் என்பதை உறுதிப்படுத்துமாறு பிரசங்கித்தார். மனிதனை சாவு, அழிவு, மரணம், பயம் ஆகியவற்றி–ருந்து இயேசு விடுவிக்கிறார் எனவும், அவர்கள் நமக்காக பாடுபட்டதினாலே மனித வாழ்வின் எப்பகுதியும் இரட்சிப்புக்கு அப்பாற்பட்டதல்ல என்பதையும் வ–யுறுத்தி கூறினார். கர்த்தருடைய இரக்கம் அவருடைய கிரியைகள் எல்லாவற்றின் மேலும் உள்ளது என்பதை விஞ்ஞான பூர்வமாக நிரூபிக்க முடியுமென கூறினார். கிறிஸ்துவின் முழு உண்மையையும் திருச்சபை ஏற்றுக்கொள்ளும்போது சமுதாயத்தில் நல்ல சாட்சிகளாக மாற முடியும் என்றும், இதனை விட்டு தற்கால எண்ணங்களுக்கு ஏற்றவாறு மாற்று போதனை செய்வது தகாத ஒன்றாகும் எனவும் கூறினார். திருமறைக்கு ஏற்றபடி தன் வாழ்க்கையை அமைத்து சாட்சிகளாக வாழ்ந்து, ஆராதனை செய்து வாழ வேண்டும் என வ–யுறுத்தினார்.

மேலும் திருச்சபைகள் நற்செய்திப்பணி செய்ய வேண்டும் எனவும் அதனை மாற்றாந்தாய் பிள்ளை போலவும் அனாதைகளைப் போலவும் நடத்தக்கூடாது எனவும் கூறினார். திருச்சபை இறை ஆட்சியின் அடையாளமாகவும், அதை உலகிற்கு வெளிப்படுத்துவது அதன் நோக்கமாக இருக்க வேண்டும் என்றும் எழுதினார்.

நவீன திருப்பணிக்கு நம் திருச்சபைகளை ஆயத்தப்படுத்த வேண்டும், இவைகள் அனைத்தும் ஒரு சவாலாகவே உள்ளது என்பதை ஒப்புக்கொண்டு திருச்சபைகள் செயலாற்ற வேண்டும், **கிறிஸ்துவின் நற்செய்தியானது வேத வசனங்களோடு மக்களுக்கு தெளிவாக அறிவிக்கப்பட வேண்டும். கிறிஸ்துவின் சுவிசேஷத்தை சக மனிதர்களுக்கு அறிவியாமல் இருப்பது மாபெரும் துரோகம்** என கூறினார்.

எதையும் துணிச்சலுடன் எதிர்கொண்டு செயலாற்றும் திறனுடையவர். இவர் எதிர்காலத்திற்காக தற்காலத்தில் வாழ்ந்த மனிதர் ஆவார். தனது 88வது வயதில் மறுமைக்குட்பட்டார்.

## ஜெபக் குறிப்புகள்



- ✞ பிப்ரவரி மாதத்தில் நடைபெற உள்ள மூன்று மாநில சுதேச ஊழியர்களின் கூட்டங்கள் ஆசீர்வாதமாய் இருக்கவும், கூட்டங்களுக்கு தேவன் விஷேசித்த பாதுகாவலைத் தரவும் ஜெபியுங்கள்.
- ✞ பிப்ரவரி 2ம் தேதி முதல் 7ம் தேதி வரை நடைபெற உள்ள B.Th., தேர்வு எழுதப்போகிற 80 சுதேச ஊழியர்களுக்கு தேவன் விஷேசித்த ஞானத்தையும், சுகத்தையும் கொடுத்து ஆசீர்வதிக்கும்படியாக ஜெபியுங்கள்.
- ✞ பிப்ரவரி மாதத்தில் மூன்று மாநிலங்களிலும் ஏரியா வாரியாக நடைபெற உள்ள விஷேச பெண்கள் கூட்டத்திற்காகவும், கூட்டங்களில் பெண்கள் அபிஷேகத்தில் நிரம்பவும், ஆசீர்வதிக்கப்படவும் ஜெபியுங்கள்.
- ✞ பணித்தளங்களில் காணப்படுகின்ற எதிர்ப்புகள் நீங்கும்படியாகவும், நம்முடைய ஊழியர்களின் மீதும், விசுவாசிகளின் மீதும் போடுகின்ற தேவையில்லாத வழக்குகள் நீங்கும்படியாகவும் ஜெபியுங்கள்.
- ✞ ஒரு கோடி பீல் இன மக்களும் இரட்சிக்கப்படவும், 2020–க்குள் 7000 கிராமங்களில் 7000 ஊழியர்களும், சபைகளும் எழுப்பப்படவும் ஜெபியுங்கள்....
- ✞ 430 சுதேச ஊழியர்களின் பரிசுத்த வாழ்விற்காக ஜெபியுங்கள்....
- ✞ ஒவ்வொரு சபையிலும் குறைந்தது 7–12 மூப்பர்கள் ஆவியினால் நிரப்பப்பட்டு, ஒரு மனதாய் ஊழியருடன் இணைந்து ஆத்துமாக்களை ஆதாயம் செய்து சபைகளை ஸ்திரப்படுத்தவும், ஜெபியுங்கள்.
- ✞ மூன்று மாநிலங்களிலும் சபைகள் ஸ்திரமாகவும், ஒழுங்காகவும் இருந்து திருமணம், இறப்பு பதிவுகள் மற்றும் கணக்கு வழக்குகளில் சிறப்பாக செயல்படவும் ஜெபியுங்கள்....
- ✞ இதுவரை கட்டி முடிக்கப்படாமல் தாமதமாகும் ஆலயங்கள் கட்டி முடிக்கப்படவும், 2010–க்குள் புதிதாக 100 ஆலயங்கள் கட்டப்படவும், அதற்கான அனுமதி கிடைக்கவும், உள்ளூர் சபைகளின் பங்கு கொடுக்கப்படவும் ஜெபியுங்கள்....
- ✞ 2010–க்குள் 300 புதிய சுதேச ஊழியர்கள் கிடைக்கப்பெறவும், 1 மாத பயிற்சி, அதைத் தொடர்ந்து தரப்படும் B.Th பயிற்சி இவைகளுக்காகவும் ஜெபியுங்கள்....
- ✞ பயிற்சி உபகரணங்கள், மூப்பர்கள் பயிற்சி, ஒ–, ஒளி உபகரணங்கள் தயாரித்துக் கொடுக்கவும் ஷாலோம் வேதாகமப்பள்ளி ஆரம்பிக்கப்படவும் ஜெபியுங்கள்.
- ✞ ஹிரோலா, ஜெரி கிராமங்களில் நடைபெறும் Compassion Project–க்காகவும், புதிய திட்டங்கள் குஜராத்தில் ஒன்றும், மத்தியப்பிரதேசத்தில் ஒன்றும் கிடைக்கப்பெறும்படியாக ஜெபியுங்கள்.



## காணிக்கை அனுப்புவதற்கான வழிகள்

- ✷ தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை மறவாமல் பெற்றுக் கொள்ளுங்கள்.
- ✷ M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- ✷ D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை Sharing Love Mission என்ற பெயருக்கு அனுப்பலாம்.
- ✷ நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகள் இருந்தால் அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.

| வங்கி கணக்கு பெயர்<br>**Sharing Love Mission** | | |
|---|---|---|
| Tamilnad Mercantile Bank | - | 106100710400009 |
| Axis (U.T.I) Bank | - | 105010100094373 |
| I.C.I.C.I Bank | - | 613901112799 |
| Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி | | |

- ✷ இன்டர்நெட்டில் NET TRANSFER வசதி உங்களுக்கு இருந்தால் NET TRANSFER மூலமாகவும் அனுப்பலாம்.
- ✷ வெளிநாட்டில் வசிப்பவர்கள் ‘‘V. DEVADOSS’’ (or) Sharing Love Mission என்ற பெயருக்கு D.D., (or) Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம்.

## ஊழியத்தின் தேவைகளும் உங்கள் பங்கும்

- ❖ மாதந்தோறும் ரூ.1500/-கொடுத்து பீல் சுதேச ஊழியரை ஜெபித்து தாங்க முன் வரலாம்.
- ❖ ரூ.500/-மாதம் கொடுத்து ஊழிய சார்பு தேவைகள் சந்திக்கும்படி ஒரு கிராமத்தில் நடைபெறும் ஊழியத்தை தாங்கலாம்.
- ❖ ரூ.400/-மாதம் கொடுத்து ஆதிவாசி சிறுவர் ஒருவரை பராமரிக்க முன் வரலாம்.
- ❖ மூத்த சுதேச ஊழியர்களுக்கு ரூ.35,000/-மதிப்பில் இரு சக்கர வாகனம் **(Two Wheeler)**  வாங்கிக் கொடுக்க முன் வரலாம்
- ❖ பணித்தளத்தில் நடைபெறும் கூட்டங்கள், மூப்பர்கள் முகாம், சுதேச ஊழியர்கள் பயிற்சி ஆகியவற்றிற்கான செலவினைப் பொறுப்பெடுத்துக் கொள்ளலாம்.
- ❖ ரூ.70/-வீதம் குஜராத்தி மற்றும் ஹிந்தி மொழிகளில் வேதாகமங்கள் பீல் விசுவாசிகள் வாங்க உதவ முன்வரலாம்.
- ❖ அத்துடன் மறவாமல் பீல் ஆதிவாசி மக்கள் இரட்சிப்பிற்காக ஜெபியுங்கள்.
- ❖ மாதந்தோறும் உங்களால் முடிந்த காணிக்கையை அனுப்புங்கள்.
- ❖ மற்றவர்களுக்கும் ஊழியத்தை அறிமுகப்படுத்துங்கள்.

இந்தப் பத்திரிக்கையை நீங்கள் இணையதளத்தின் மூலமாகவும் வாசித்து தேவனை மகிமைப்படுத்தலாம். மட்டுமல்லாமல் உங்கள் நண்பர்கள் உறவினர்களுக்கு இமெயில் மூலமாகவும் அறிமுகப்படுத்த அன்பாய் கேட்கிறோம்.

**http://www.shalommission.in/magazineview.asp**

## நாட்டு நடப்புச் செய்திகள்....

காஷ்மீர் மாநிலத்தில் 800 தீவிரவாதிகள் பதுங்கி இருந்து செயல்பட்டு வருவதாக வடக்கு மண்டல ராணுவ தளபதி பரத்வாஜ் கூறியுள்ளார். இதனால் எல்லைப் பகுதிகளில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் தீவிரவாதிகளின் தலைவர்கள் கொல்லப்பட்டுவிட்டதால் தீவிரவாதிகளால் துணிச்சலாக இயங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மும்பை தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து எல்லைப் பகுதிகளில் நமது படைகள் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

ஹங்கேரி நாட்டில் புடாபெஸ்ட் நகரிலுள்ள வனவிலங்கு பூங்காவிலுள்ள லீசெல் என்ற 32 வயதான பெண் கொரில்லாவிற்கு கருப்பையில் கட்டி உருவானதால் உயிருக்கே ஆபத்தான நிலைக்குச் சென்றது. இதனால் கால்நடை மருத்துவர்களும், மனிதர்களுக்கான மருத்துவர்களும் இணைந்து அறுவை சிகிச்சை செய்து கட்டியை நீக்கி கொரில்லாவை காப்பாற்றியுள்ளனர்.

ஜப்பானில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய ரயில்வே அமைச்சர் லாலு பிரசாத் அவர்கள் மணிக்கு 300 கீ.மீ வேகத்தில் செல்லும் புல்லட் இரயி–ல் பயணம் செய்தார். மேலும் இந்தியாவில் முதல்கட்டமாக டெல்– – அமிர்தசரஸ் வழித்தடத்திலும் பின்பு சென்னை, பெங்களூர், கோவை, எர்ணாகுளம், ஐதராபாத், விஜயவாடா, புனே, மும்பை, அகமதாபாத் ஆகிய வழித்தடங்களில் அதிவேக புல்லட் ரயில் இயக்க இந்திய அரசு திட்டமிட்டுள்ளது.

இந்தியாவில் வாடிக்கையாளர்களுக்கு தரமான சேவைகளை வழங்குவதில் ஐந்து போன் நிறுவனங்கள் மட்டுமே டிராய் அமைப்பு நிர்ணயித்த அளவுக்கு செயல்படுவதாக ஓர் ஆய்வு கூறுகிறது. வாடிக்கையாளர்களுக்கு 90% மேல் திருப்தி இருக்க வேண்டும் என டிராய் அமைப்பு கூறியுள்ளது. கடந்த அக்டோபர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை 1,318 பேரிடம் நடத்திய ஆய்வில் 11 நிறுவனங்களில் 5 நிறுவனங்கள் மட்டுமே டிராய் அமைப்பு நிர்ணயித்த அளவை எட்டியுள்ளன.

ஜார்கண்ட் முதல்வர் சிபுசோரன் இடைத்தேர்த–ல் தோல்வியடைந்ததை முன்னிட்டு கடந்த ஜனவரி 12 ம் தேதி பதவியை ராஜினாமா செய்தார். ஆனால் தனக்குப் பதிலாக ஜே.எம்.எம் கட்சியைச் சேர்ந்த சம்பை சோரனை முதல்வராக்க வேண்டும் என நிபந்தனை விதித்தார். இந்நிலையில் சிபுசோரன் நெஞ்சுவ– ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பை சோரனை முதல்வராக்குவதில் ஐ.மு. கூட்டணி கட்சிகளிடையே ஒருமித்த கருத்து ஏற்படவில்லை. இதனால் அங்கு அரசியல் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

டீசல் விலையை –ட்டருக்கு ரூ. 10/– குறைப்பது உள்பட 8 அம்ச கோரிக்கைகளை வ–யுறுத்தி லாரி உரிமையாளர்கள் ஜனவரி 4ம் தேதி நள்ளிரவு முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இந்த வேலை நிறுத்தம் 8 நாட்களாக நீடித்தது. மத்திய தரைவழி போக்குவரத்துத் துறை அமைச்சர் டி.ஆர். பாலு தலைமையில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்திற்குப் பின் லாரி உரிமையாளர்களிடம் நடத்திய பேச்சு வார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டு, லாரி ஸ்டிரைக் வாபஸ் பெறப்பட்டது.

– நன்றி தினகரன்

# மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனை & நற்செய்தி கூட்டங்கள்

கடந்த டிசம்பர் 26,27 தேதிகளில் தூத்துக்குடி – நாசரேத் திருமண்டலம் கிறிஸ்டியாநகரம் சேகரம், தங்கநகரம் தூய. பவுல் C.S.I. ஆலய வளாகத்தில் **நற்செய்தி கூட்டங்கள்** மிகச் சிறப்பாக நடைபெற்றது. 26ம் தேதி **சகோதரி வஹிதா தேவதாஸ்** அவர்களும், 27ம் தேதி **சகோ. தேவதாஸ்** அவர்களும் தேவ செய்தி அளித்தார்கள்.

27ம் தேதி அன்று மதியம் ஆலயத்தில் வைத்து **சகோ. விசையா P. மாவி** (குண்டிகேடா, குஜராத்), **சகோ. ரமேஷ் சந்ரா காட்,** (வால்புரா, இராஜஸ்தான்) ஆகிய இரண்டு ஷாலோம் பீல் சுதேச ஊழியர்களை பிரதிஷ்டை செய்ய தேவன் கிருபை செய்தார். இந்த இரண்டு ஊழியர்களும் சாட்சிகளை பகிர்ந்து கொள்ள சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் தமிழில் மொழியாக்கம் செய்தார்கள். சகோ. தேவதாஸ் அவர்கள் மிஷனெரி செய்தி அளித்தார்கள். இந்த மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனையை சேகரகுரு Rev.T.O.M., **கோல்டுவின்** B.Com., B.D., அவர்கள் தலைமை தாங்கினார்கள். இந்த இரண்டு ஊழியர்களும் **திரு. செல்வராஜ்** மற்றும் **திரு. சாலமோன்** ஆகியோர் குடும்பம் மூலமாக தாங்கப்பட்டு வருகிறார்கள். கர்த்தர்தாமே இந்த இரண்டு குடும்பங்களையும், குருவானவரையும், திருச்சபையையும் ஆசிர்வதிப்பாராக!





**1000 கிராமங்கள் 1000 சுதேச ஊழியர்கள் எழும்பி 1000 சபைகள் உருவாக்கும் தரிசனப் பணியில் தற்போது இன்னும் 96 சுதேச ஊழியர்களை ரூ. 1500/– மாதம் கொடுத்து ஜெபித்து தாங்க குடும்பங்கள், குழுக்கள், சபைகள் தேவை. கர்த்தர் உங்கள் மனதில் ஏவினால் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.**

Registered with the Registrar of News Paper in India
Under No. TNTAM/2004/16449.
Postal Regn. No. TTN/07/2009-2011.
Postal at Chidambaranagar P.O. 628008 on 25th & 28th of every month

## இராஜஸ்தான், பிஜல்பூர் ஷாலோம் பள்ளி மற்றும் விடுதி மாணவர்கள் மத்தியில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்கள்


மாணவர்களின் அன்பான வரவேற்பு


கிறிஸ்துமஸ் தாத்தாவின் வரவேற்பு


செய்தியளிக்கும் சகோ. வே. தேவதாஸ்


இயேசுவை ஆராதிக்கும் பீல் ஆதிவாசி மாணவர்கள்


கிறிஸ்துமஸ் சிறப்புப் பாடல்


மாணவர்களின் சிறப்புப் ஆங்கிலப் பாடல்



பீல் ஆதிவாசி மாணர்களின் சிறப்பு கிறிஸ்துமஸ் கலை நிகழ்ச்சிகள்

Owned and Published by V. Devadoss from 168/5, Caldwell Colony, 3rd Street, Tuticorin - 628 008. and Printed by S.Joseph at Rajan Press, 59, Palayamkottai Road, Tuticorin - 628 002. Editor : V. Devadoss